# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097109

1. District : மாவட்டம் சென்னை
   PS: காவல்நிலையம் V&AC சென்னை நகரப்பிரிவு - II
   Year: ஆண்டு 2019
   FIR No.: மு.த.அ. எண் 03/19
   Date: நாள் 13.02.2019

2. (i) Act சட்டம்:
   Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்:
   Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 Amended 2018
   (iii) Act சட்டம்:
   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 12.2.2019
   Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் at about 17.45 hrs
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.2.2019
   Time : நேரம் 09.30 Am.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.2.2019
   Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
   எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P S
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. தில்லைராஜ்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் E. கணேசன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1968
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் EB Wiring
   (g) Address : முகவரி No. 21/2, [illegible] அம்மன் அலிகான் 7வது லேன், ஆயிரம் விளக்கு, சென்னை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. முருக செல்வம், உதவி செயற் பொறியாளர், TNEB [illegible], மாரின், ஜார்ஜ் டவுன், சென்னை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதம் இல்லை.

* GCP 240-34(Type-2) 90 000 Cps.-21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனி தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed [illegible]...... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M. விஸ்வகுமார் பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 13.2.19.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 13.02.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. VISVAKUMAR
Rank: நிலை Inspector of Police No. எண் .........
CC-II, VSAC, Ch-16.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

பணிந்தனுப்பப்படுகிறது:- இன்று 13.02.2019-ந் தேதி காலை 08.00 மணிக்கு சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு -2-ன் காவல் ஆய்வாளர் M.விஸ்வகுமார் ஆகிய நான் அலுவகத்தில் பணியிலிருந்தபோது சென்னை, ஆயிரம்விளக்கு, குலாம் அபாஸ் அலிகான் 7வது லேன், எண்.21/2-ல் வசிக்கும் திரு. G. தில்லைராஜ் என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் மறைமுக விசாரணை செய்து இன்று 13.02.2019-ந் தேதி காலை 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- விடுநர், G. தில்லைராஜ், த/பெ. E. கணேசன், எண்.21/2, குலாம் அபாஸ் அலிகான் 7வது லேன், ஆயிரம் விளக்கு, சென்னை - 06. பெறுநர், காவல் ஆய்வாள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகரப்பிரிவு - 2, ஆலந்தூர், சென்னை - 16. அய்யா, நான் கட்டிடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் வீடுகளுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருந்து மின் இணைப்பு வாங்கி தரும் பணியை கடந்த 20 வருடங்களாக செய்து வருகிறேன். இதற்கென சர்வீஸ் சார்ஜ்யை கட்டிட உரிமையாளர் அல்லது ஒப்பந்ததார் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொள்வேன். சென்னை, ஜார்ஜ் டவுன், மூக்கர் நல்லமுத்து தெரு, பழைய எண். 40/41, புதிய கதவு எண்.27 -ல் ஹிதாயத்துல்லா என்பவர் G +2 வணிக வளாக கட்டித்தை கட்டி வருகிறார். அந்த கட்டிடத்தை திரு.மேகநாதன் என்பவர் கட்டி தரும் ஒப்பந்ததாரராக உள்ளார். அவருடைய தம்பி திரு.செல்வம் என்பவர் எனக்கு நீண்ட கால நண்பரானதால் மேற்படி வணிக வளாக கட்டிடத்திற்கு மின் இணைப்புகள் பெற்றுத் தருமாறு என்னிடம் கூறினார். மின் இணைப்பு பெற்றுத்தரும் பணியை முடித்துக் கொடுப்பதற்கான அனுமதி கடிதமும் அளித்தார். மேற்படி வணிக வளாக கட்டிடத்தில் 5 கடைகள் உள்ளதால் அந்த வளாகத்திற்கு 5 மும்முனை மின் இணைப்புகள் மற்றும் 1 பொது மும்முனை மின் இணைப்பு பெற்றுத்தருமாறு கூறி அதற்கென மின் இணைப்பு கட்டணம், என்னுடைய சர்வீஸ் சார்ஜ் மற்றும் இதர செலவுகள் ஆகியவற்றிற்கென ரூபாய் ஒரு லட்சம் (ரூ.1,00,000/-) 11.02.2019-ந் தேதி கொடுத்தார். நான் 11.02.2019-ந் தேதி மேற்படி வணிக வளாகத்திற்கு மும்முனை மின் இணைப்புகள் பெறுவதற்கு தேவையான படிவங்கள், ஆவணங்கள் ஆகியவற்றை தயார் செய்து திரு.செல்வத்திடம் கொடுத்தேன். அவர் கட்டிட உரிமையாளர் திரு.ஹிதாயத்துல்லா அவர்களிடம் கையொப்பம் பெற்று என்னிடம் கொடுத்தார். பிறகு 12.02.2019-ந் தேதி மாலை சுமார் 4 மணிக்கு நான் உயர்நீதிமன்றத்திற்கு அருகில் உள்ள உதவி செயற்பொறியாளர், எஸ்பிளனேடு, பாரிமுனை மின்சார வாரிய அலுவலகம் சென்று உதவி செயற்பொறியாளர் திரு.முருகசெல்வம் அவர்களை சந்தித்து மின் இணைப்பு பெறுவதற்கான படிவத்தை அவரிடம் சமர்ப்பித்தேன். அவர் அதனை வாங்காமல் வணிக வளாகத்தினை பார்வையிட்ட பின் SK நகர், உதவி பொறியாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கூறினார். நான் எப்போது வந்து இடத்தினை பார்க்கிறீர்கள் என்று கேட்டதற்கு நீங்கள் போய் பில்டிங்கில் வெயிட் பண்ணுங்க, நான் வந்து பார்க்கிறேன் என்று கூறினார். அதனால் நான் மேற்படி வணிகவளாத்திற்கு சென்று உதவி செயற்பொறியாளர் அவர்களின் வருகைக்காக காத்திருந்தேன். 12.02.2019-ந் தேதி மாலை சுமார் 5.45 மணிக்கு எஸ்பிளனேடு மின் வாரிய உதவி செயற்பொறியாளர் திரு.முருகசெல்வமும், SK நகர் மின்வாரிய உதவி பொறியாளர் திரு.ஜோஸ் ஆல்வின் ஆகிய இருவரும் வணிக வளாகத்திற்கு வந்து பார்வையிட்டனர். பிறகு உதவி செயற்பொறியாளர் திரு.முருகசெல்வம் அவர்கள் என்னிடம் ஒரு மீட்டருக்கு ரூ.50,000/- வீதம் 6 மீட்டருக்கு ரூ.3,00,000/- எனக்கு தனியாக தந்துவிட வேண்டும் என்றும், அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை தனியாக கட்டிவிட வேண்டும் என்றும் கூறினார். நான்

அதிர்ச்சியாகி நின்றேன். அதை பார்த்துவிட்டு என்ன ரொம்ப அதிகமாக தெரியுதா ? வேண்டுமென்றால் அதிலிருந்து ரூ.50,000/- த்தை குறைத்துக் கொண்டு ரூ.2,50,000/-த்தை கொடுத்துவிடுங்கள் என்றார். நான் திரு.முருகசெல்வம் அவர்கள் ரூ.2,50,000/-த்தை லஞ்சமாக தான் கேட்கிறார் என்று புரிந்து கொண்டு தயங்கி நின்றேன். அதற்கு அவர் அவ்வளவு பணத்தை உடனே ரெடி செய்ய முடியவில்லை என்றால் முதலில் ரூ.1,00,000/-த்தை ரெடி செய்து, நாளைக்கு கொண்டு வந்து எனக்கு கொடுத்துவிட்டு அப்ளிகேஷனை ஆபிஸில் கொடுத்து அதற்குரிய கட்டணத்தை தனியாக கட்டிவிடுங்கள், மீதி பணம் ரூ.1,50,000/-த்தை கேபிள் போடும்போது கொடுத்துடுங்க என்று கூறினார். சார் எங்களுக்கு அவ்வளவு சர்வீஸ் சார்ஜ் கிடையாது, இவ்வளவு பணத்தை யாரும் தரமாட்டார்கள் என்று நான் கூறினேன். அதற்கு அவர் கனெக்ஷன் வேண்டுமென்றால் நாளை காலையில வந்து எனக்கு பணத்தை கொடுத்தீர்கள் என்றால் உங்கள் வேலையை 10 நிமிடத்தில் முடித்து கொடுப்பேன், இல்லையென்றால் இதற்கு மேல் என்னை பார்க்க வரவேண்டாம், நீங்க யாரிடம் சென்றாலும் நான்தான் கையெழுத்து போடவேண்டும், அதனால் உங்க வேலையை நான் முடிக்க மாட்டேன் என்று சொன்னார். மேற்படி வணிக வளாகத்திற்கு மும்முனை மின் இணைப்புகள் பெற உதவி செயற்பொறியாளர் திரு.முருகசெல்வம் அவர்கள் கேட்ட லஞ்ச பணத்திற்காக ஒப்பந்ததாரரிடம் போனால் என்னிடம் அளித்த பணியை திரும்ப பெற்றுக் கொள்வார். அதனால் என்னுடைய வருமானமும் 20 வருட தொழில் நம்பிக்கையும் பாதிக்கப்படும். ஆகவே, எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. அதனால், மேற்படி வணிக வளாகத்திற்கு என்னிடம் 6 மும்முனை மின் இணைப்புகள் வழங்குவதற்காக ரூ.1,00,000/-த்தை முன் பணமாக லஞ்சமாக கேட்ட எஸ்பிளனேடு மின்வாரிய உதவி செயற்பொறியாளர் திரு.முருகசெல்வம் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd. XXX G தில்லைராஜ். Sir, Received a complaint on 13.02.2019 at 08.00 hrs. Sd XXX M.Visvakhumar, Inspector of Police, CC –II, V&AC, Chennai -16. Sir, after due verification, a case was registered in V &AC, Chennai City –II, Cr.No.03/AC/2019/CC-II, U/s. 7 of PC Act 1988 (amended Act 2018) on 13.02.2019 at 09.30 hrs.

The original FIR along with complaint submitted before the Hon'ble Special Judge, for cases under PC Act, Special Court, Chennai and other copies submitted to officer concerned.

M.Visvakhumar
13.2.19
Inspr, CC-II,
V&AC, Ch.16